## பா.ஜ.க.வுக்கு வாக்களிக்கவில்லை என்பதாலேயே

# மோடி அரசு தமிழ்நாட்டை வஞ்சிக்கிறது!

## கோவை – கொடிசியாவில், கொங்கு நாடு மக்கள் தேசியக் கட்சியின் பாராட்டு விழாவில் – முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!

கோவை, ஏப். 8 -

**“பா.ஜ.க.வுக்கு வாக்களிக்கவில்லை என்பதாலேயே, மோடி அரசு தமிழ்நாட்டை வஞ்சிக்கிறது” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கோவை கொடிசியாவில் நடைபெற்ற கொங்கு நாடு மக்கள் தேசியக் கட்சியின் பாராட்டு விழாவில் உரையாற்றும்போது கூறினார்.**





தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம், (6.4.2025) கோயம்புத்தூர், கொடிசியா மைதானத்தில், கொங்குநாடு கலைக்குழு சார்பில் வள்ளிக்கும்மி கின்னஸ் சாதனை புரிந்த 16 ஆயிரம் பெண்களுக்கான பாராட்டு விழாவில் கலந்து கொண்டு ஆற்றிய உரை வருமாறு:-

என் உரையைத் தொடங்குவதற்கு முன்பு கலைக்குழு சார்பில், வள்ளிக்கும்மியில் பங்கேற்ற 16 ஆயிரம் பெண்களுக்கு முதலில் என்னுடைய வாழ்த்துகள், பாராட்டுக்கள்.

கலக்கீட்டிங்க. பெண்கள் என்றாலே சாதனைதான்; சாதனை என்றாலே பெண்கள்தான். எனவே, சாதனைப் பெண்களுக்கு மீண்டும் என்னுடைய பாராட்டுகள்; வாழ்த்துகள்.

இங்கே நிறைய மகளிர் இருக்கிறீர்கள். என்னைப் பொறுத்தவரை இந்த ஆட்சியே மகளிருக்கான ஆட்சிதான் என்பதும் உங்களுக்கு நன்றாகத் தெரியும். அந்த உணர்வோடு, இந்தச் சிறப்பான நிகழ்ச்சியில் உங்களோடு சேர்ந்து நானும் கலந்து கொண்டு உங்களை எல்லாம் வாழ்த்துவதற்கு வந்திருக்கிறேன்.

கொங்குநாடு மக்கள் தேசியக் கட்சி சார்பில் நடைபெறும் இந்த வள்ளிக்கும்மி கின்னஸ் சாதனை பாராட்டு விழாவில் கலந்து கொள்வதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

### நல்வாய்ப்பை உருவாக்கிய நண்பர் ஈஸ்வரனுக்கு நன்றி!

கொங்குநாடு கலைக் குழுவின் ஏற்பாட்டில் நடைபெற்ற ‘வள்ளிக்கும்மியில்’ இதுவரை 16 ஆயிரம் பெண்கள் பங்கெடுத்திருப்பது என்பது மிகப் பெரிய சாதனையாக அமைந்திருக்கிறது. எனவே, இந்த விழாவில் நான் பங்கெடுக்க வேண்டும் என்று நம்முடைய அன்புக்குரிய ஈஸ்வரன் அவர்கள் என்னிடத்தில் அழுத்தமாக எடுத்துச் சொல்லி, அன்போடு கேட்டு, அவருடைய அன்பை தட்டமுடியாமல் நானும் இந்த நிகழ்ச்சிக்கு வந்திருக்கிறேன். இந்த வாய்ப்பை எனக்கு உருவாக்கித் தந்திருக்கக் கூடிய நம்முடைய மதிப்பிற்குரிய ஈஸ்வரன் அவர்களுக்கும், கொங்குநாடு மக்கள் தேசியக் கட்சியின் நிர்வாகிகளுக்கும், இந்த வள்ளிக்கும்மி விழாவில் பங்கேற்று இருக்கக் கூடிய அருமைச் சகோதரிகளுக்கும் என்னுடைய நன்றியை நான் மீண்டும் ஒருமுறை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

சட்டமன்றத்திலும், மக்கள் மன்றத்திலும், மக்களுக்காகப் போராடியும், வாதாடியும், இந்த மேற்கு மண்டல எல்லோருடைய கவனத்தையும் பெற்றவர் நம்முடைய அன்புக்குரிய ஈஸ்வரன் அவர்கள். அவர் என்ன பேசினாலும், எங்கே சென்று பேசினாலும், அதில் மேற்கு மண்டலத்தின் மக்களுடைய நன்மை அடங்கியிருக்கும். நான் கூர்ந்து கவனிப்பதுண்டு. அவருடைய பேச்சிலும் அது எதிரொலிக்கும்.

அதேபோல, நம்முடைய திராவிட மாடல் ஆட்சியைப் பொறுத்தவரைக்கும், அவரே குறிப்பிட்டுச் சொன்னார். நான் ஆட்சிப் பொறுப்பை ஏற்பதற்கு முன்னால், தேர்தல் நிலவரங்கள் எல்லாம் முடிவுறக்கூடிய சூழ்நிலை வந்தபோது, நான் கொளத்தூர் தொகுதியில் வெற்றி பெற்று, வாக்குகள் எண்ணப்பட்ட லயோலா கல்லூரிக்கு சென்று வெற்றி பெற்றதற்கான சான்றிதழைப் பெற்று, அதற்குப் பிறகு அறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோருடைய நினைவிடங்களுக்குச் சென்று அங்கே அவர்களுக்கு மரியாதையைச் செலுத்தியபின்பு, பத்திரிகை நிருபர்கள் எல்லாம் என்னை சூழ்ந்து கொண்டு கேட்டார்கள் - “ஆட்சிப் பொறுப்பு ஏற்கப் போகிறீர்கள் - தமிழ்நாட்டு மக்களுக்கு என்ன சொல்லப் போகிறீர்கள்?” என்று கேட்டார்கள். “நான் எதையும் சொல்ல விரும்பவில்லை. ஒன்றே ஒன்று அழுத்தமாகச் சொல்ல விரும்புகிறேன் என்று சொன்னேன். என்னை நம்பி வாக்களித்திருக்கக் கூடிய மக்களுக்கு மட்டுமல்ல; வாக்களிக்கத் தவறியவர்களுக்கும் சேர்த்து இந்த ஆட்சி நடைபெறும். அதையும் தாண்டி சொல்கிறேன். வாக்களித்தவர்கள் மகிழ்ச்சி அடைய வேண்டும். வாக்களிக்க தவறியவர்கள் இப்படிப்பட்டவருக்கு வாக்களிக்காமல் தவறிவிட்டோமே என்று வருத்தப்படவேண்டும். அந்த வகையில் நிச்சயமாக எங்களுடைய ஆட்சி இருக்கும் என்று நான் உறுதியாகச் சொன்னேன்.

அப்படித்தான் இந்த மேற்கு மண்டலத்திற்கும் ஏராளமான திட்டங்களை நம்முடைய அரசு செய்து கொண்டிருக்கிறது என்பதை நம்முடைய ஈஸ்வரன் அவர்கள் நேரமில்லாத காரணத்தால் அது ஒன்றை மட்டும் தெளிவாகக் குறிப்பிட்டுச் சொன்னார்.

### 2026 ஆம் ஆண்டும் நாம்தான் வெற்றி பெறுவோம்!

உங்களுடைய நன்மதிப்பையும் நாங்கள் பெற்றிருக்கிறோம். அதனால்தான், தொடர்ந்து 2024 நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க அமோகமான வெற்றி - முழுமையான வெற்றியைப் பெற்றோம். அந்த 40க்கு 40 என்ற முழு வெற்றியைப் பெற்றிருக்கிறோம் என்று சொன்னால், நம்முடைய ஆட்சிக்குக் கிடைத்திருக்கின்ற நற்சான்றிதழ். அதைப்போல் வருகிற 2026ஆம் ஆண்டும் மீண்டும் சொல்கிறேன் - நாம்தான் வெற்றி பெறப் போகிறோம். நம்முடைய அணிதான் வெற்றி பெறப் போகிறது. நிச்சயம் அது தொடரும்!

ஆனால், இன்றைக்கு மோடி அவர்கள் தலைமையில் இருக்கக்கூடிய ஒன்றிய அரசு, நம்முடைய ஆட்சி போல இல்லாமல், வாக்களிக்காத தமிழ்நாட்டை வஞ்சித்துக் கொண்டிருக்கிறது. அவர்களுடைய வஞ்சனையையும் கடந்து, வளர்ச்சியில் தமிழ்நாடு இன்றைக்கு அனைத்துத் துறைகளிலும் முதலிடத்தில் இருக்கிறது.

தமிழ்நாட்டிற்கு முறையாக நிதிகளை வழங்கி, தமிழ்நாட்டிற்குரிய திட்டங்களைச் செய்து தரும் ஒன்றிய அரசு அமைந்திருந்தால், இன்றைக்கு இந்திய அளவில் இல்லை - உலக அளவில் நாம்தான் முதலிடத்தில் இருப்போம். அந்த அளவிற்கு இன்னும் வேகமாக நடைபோட்டுக் கொண்டிருக்கக் கூடிய வாய்ப்பு நமக்குக் கிடைத்திருக்கும்.

இன்றைக்கு காலையில் கூட, தொகுதி மறுசீரமைப்பில் தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்கள் பாதிக்கப்படாது என்ற உறுதியை பிரதமர் அவர்கள் வழங்கவேண்டும் என்று நான் கோரிக்கை வைத்தேன். நான் தெளிவாக குறிப்பிட்டுச் சொன்னேன்.

பிரதமர் அவர்கள் இன்னும் அரை மணி நேரத்தில் தமிழ்நாட்டிற்கு வருகிறார்; இராமேஸ்வரத்திற்கு வருகிறார் - பாலத்தைத் திறந்து வைக்கப் போகிறார். அதுவும் எங்கே இருந்து வருகிறார் என்று கேட்டால், இலங்கையிலிருந்து வருகிறார். இலங்கையில் நம்முடைய மீனவர்கள் துன்பத்திற்கு ஆளாகக்கூடிய அந்தச் துயரத்திற்கெல்லாம் ஒரு விடிவு கிடைக்கும். அதையெல்லாம் பேசிவிட்டு வந்து இங்கே செய்தியைச் சொல்வார்.

தொகுதி மறுசீரமைப்பைப் பற்றி நாம் அழுத்தமாக சட்டமன்றத்தில் தீர்மானம் போட்டிருக்கிறோம். தமிழ்நாட்டில் இருக்கக் கூடிய அனைத்துக் கட்சித் தலைவர்களை எல்லாம் அழைத்து விவாதித்திருக்கிறோம். அதற்குப் பிறகு தென் மாநிலங்கள் மட்டுமல்ல - வட மாநிலங்களில் இருக்கக்கூடிய மாநில தலைவர்களும், 3 முதலமைச்சர்கள், துணை முதலமைச்சரும் பங்கேற்ற கூட்டம் கடந்த 22ஆம் தேதி நடைபெற்றது. அதில் தீர்மானம் போட்டு, பிரதமரைச் சந்திக்க நேரம் கேட்டிருக்கிறோம். இன்னும் இதுவரை அவரிடமிருந்து ஒப்புதல் வரவில்லை.

### தமிழ்நாட்டைத் தவிர்க்கக் கூடியவர்களுக்கு- ‘தமிழ்நாட்டில் இடம் இல்லை’ என்று கூறுங்கள்!

இதற்கிடையில் நீங்கள் தமிழ்நாட்டிற்கு வருகிறீர்கள். வரக்கூடிய நீங்கள் அதைத் தெளிவு படுத்தவேண்டும் - அதை விளக்கமாகக் குறிப்பிட்டுச் சொல்லவேண்டும் என்று நான் கோரிக்கை வைத்தேன்.

ஆனால் மக்களுடைய முக்கியமான பிரச்சனைகளுக்கு பதில் சொல்லாமல், தவிர்ப்பவர்களை நாம் என்ன செய்யமுடியும்; வேறு வழியில்லை. அப்படி தமிழ்நாட்டை தவிர்க்கக்கூடிய உங்களுக்கு மீண்டும் தமிழ்நாட்டில் இடமே இல்லை என்ற பதிலைத் தான் வருகின்ற தேர்தலில் நீங்கள் வழங்கிட வேண்டும் என்று இந்த நிகழ்ச்சியின் மூலமாக நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கொங்கு கலைக்குழு சார்பில் நடைபெற்றிருக்கின்ற இந்த வள்ளிக்கும்மி கலை விழா; கலை வளர்ச்சிக்கும், அதன் மூலமாக, தமிழ் பண்பாட்டு வளர்ச்சிக்கும், தமிழர் ஒற்றுமையோடு இருக்கவேண்டும் என்ற அந்த உணர்வோடும் விளங்கிட வேண்டும் என்றும், எந்தவொரு கலையும், சமூக முன்னேற்றத்திற்கும், நல்லிணக்கத்திற்கும் துணையாக அமைய வேண்டும் என்றும் நான் உங்களையெல்லாம் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்!

இந்தச் சிறப்பான நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, அதுவும் இவ்வளவு ஆயிரக்கணக்கான பெண்கள் திரண்டிருக்கக்கூடிய இந்தக் கூட்டத்தில் விரைவாகப் பேசிவிட்டுச் செல்வதற்கு என்னுடைய மனது கேட்கவில்லை.

நான் விமானத்தைப் பிடித்து இரவோடு இரவாக சென்னைக்குச் செல்லவேண்டும். நாளைக்கு சட்டமன்றம் இருக்கிறது – எனக்கு மட்டுமல்ல, ஈஸ்வரனுக்கும் இருக்கிறது. அந்தக் கடமையும் நாங்கள் ஆற்றிடவேண்டும். எனவே, நீண்ட நேரம் உங்களிடத்தில் நின்று உரையாற்ற வாய்ப்பில்லை என்ற அந்தக் காரணத்தால், இந்த அளவில் நான் என்னுடைய உரையை நிறைவு செய்வதற்கு முன்பு, உங்கள் அத்தனை பேருக்கும் மீண்டும் என்னுடைய நெஞ்சார்ந்த வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

## கச்சத்தீவுப் பிரச்சினை: பேரவையில் முதல்வர் உரை!... முதல் பக்கத் தொடர்ச்சி

எனவே, இப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சியின் ஒரு பகுதியாக, தமிழ்நாடு அரசு சில முன்னெடுப்புகளை மேற்கொண்டுள்ளது. அவற்றை தங்கள் வாயிலாக இப்பேரவைக்கும், நாட்டு மக்களுக்கும் தெரிவிக்க விரும்புகிறேன்.

**(1) மன்னார் வளைகுடா பகுதி மீனவர்கள் ஆழ்கடல் மீன்பிடிப்பிற்காக தெற்கு பகுதியில் இந்தியப் பெருங்கடல் நோக்கிச் செல்வதற்கு வழிவகை செய்யும்பொருட்டு, தங்கச்சிமடம் பகுதியில் 150 கோடி ரூபாய் செலவில் மீன்பிடித் துறைமுகம் அமைப்பதற்கு அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. விரைவில் இதற்கான பணிகள் துவங்கும். (மேசையைத் தட்டும் ஒலி)**

**(2) 60 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பாம்பன் பகுதியிலும் மற்றும் ரூபாய் 150 கோடி மதிப்பீட்டில் குந்துக்கல் பகுதியிலும் மீன்பிடித் துறைமுகப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்று ஏற்கெனவே நான் அறிவித்துள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி)**

**இவற்றைத் தவிர, மன்னார் வளைகுடா பகுதியில் மீனவர்களின் வாழ்வாதாரத்தை உறுதிபடுத்த சில புதிய வாழ்வாதாரத் திட்டங்களையும் செயல்படுத்திட பின்வரும் சிறப்புத் திட்டங்களை அறிவிக்கின்றேன்:**

**1. கடற்பாசி வளர்ப்பு, பதப்படுத்துதல், மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள், விற்பனை தொடர்புடைய தொழில்களுக்கு தொழில்நுட்பப் பயிற்சியுடன் தேவையான உபகரணங்கள் அளித்து தொழிலில் ஈடுபட சுமார் 7000 பயனாளிகளுக்கு 52 கோடியே 33 இலட்சம் ரூபாய் செலவில் சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)**

**2. கூண்டு முறையில் மீன் மற்றும் சேற்று நண்டு வளர்ப்பு, பதப்படுத்துதல், விற்பனை தொடர்புடைய தொழில்களை மீனவ சமுதாய மக்கள் மேற்கொள்ள 25 கோடியே 82 இலட்சம் ரூபாய் செலவில் உபகரணங்கள் வழங்கி, தொடர்பணிகளும் மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)**

**3. மீன் பதப்படுத்துதல், மீன் உலர்த்தும் தொழில்நுட்பங்கள், தொழில்நுட்ப உபகரணங்களை அளித்தல் மற்றும் பயிற்சிகள் வழங்கி ஊக்குவிக்கும் திட்டம் சுமார் 2,500 மீனவக் குடும்பங்களைச் சார்ந்த பயனாளிகளுக்கு 9 கோடியே 90 இலட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)**

**4. சுமார் 15 ஆயிரத்து 300 மீனவர்களுக்கு, மீன் மற்றும் மீன் சார்ந்த மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களை தயார் செய்வதற்கான தொழில்நுட்ப பயிற்சி வழங்கிட 20 கோடியே 55 இலட்சம் ரூபாய் செலவில் திட்டம் செயல்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)**

**5. மீன் வளம் சார்ந்த மாற்று வாழ்வாதாரமான வலை பின்னுதல், வலை பழுதுபார்த்தல், படகு கட்டுமானத் தொழில் படகு பழுதுபார்த்தல், கருவாடு தயாரித்தல், வண்ண மீன் தொட்டிகள் தயாரித்தல், படகு ஓட்டுநர் பயிற்சி, கடல்சிப்பி அலங்கார பொருட்கள் தயாரித்தல் ஆகிய தொழில்கள் செய்ய 54 கோடியே 48 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சுமார் 20,100 மீனவர்கள் பயன் பெறக்கூடிய வகையில் திட்டங்கள் செயல்படுத்தப்படும்.**

> **நமது மீனவர்களின் வாழ்வாதாரத்தைக் காத்து மேம்படுத்தும் பொருட்டு, இந்திய பெருங்கடலில் ஆழ்கடல் மீன்பிடிப்பு செய்வதற்கு ஏதுவாக, ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட மீன்பிடித் துறைமுகங்கள் 360 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த 216 கோடியே 73 இலட்சம் ரூபாய் செலவிடப்படும். மொத்தம் 576 கோடியே 73 இலட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும் இந்தத் திட்டங்களால் மன்னார் வளைகுடா பகுதியைச் சார்ந்த மாவட்டங்களின் மீனவர்கள் பெரிதும் பயனடைவார்கள்; (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களுடைய வாழ்வாதாரமும் மேம்படும்.**

**6. மீன் வளம் சாராத பிற தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்தித்தர, குறிப்பாக, காளான் வளர்ப்பு, சுற்றுலா படகு இயக்குதல், கைவினைப் பொருட்கள் தயாரித்தல், வீட்டுமுறை மசாலா பொடிகள் தயாரித்தல், அழகுக்கலை பயிற்சி, சிறுதானிய உணவு தயாரித்தல் போன்ற பல்வேறு தொழில்கள் செய்ய சுமார் 14 ஆயிரத்து 700 பயனாளிகளுக்கு, 53 கோடியே 62 இலட்சம் ரூபாய் செலவில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)**

தமிழ்நாடு அரசின் மீன்வளத் துறை, மீனவர் கூட்டுறவு சங்கங்கள், மகளிர் சுயஉதவிக் குழுக்கள், தொழிலாளர் நலத்துறை, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகம், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் போன்ற பல்வேறு அமைப்புகளும், அரசு துறைகளும் இணைந்து இத்திட்டங்களைச் செயல்படுத்தும்.

### திட்டங்களை ஒருங்கிணைக்க கண்காணிப்புப் பிரிவு!

இந்தத் திட்டங்களை எல்லாம் ஒருங்கிணைக்க திட்டக் கண்காணிப்புப் பிரிவு உருவாக்கப்பட்டு, அதன் மூலம் திட்டச் செயல்பாடு தொடர்ந்து கண்காணிக்கப்படும்.

நமது மீனவர்களின் வாழ்வாதாரத்தைக் காத்து மேம்படுத்தும் பொருட்டு, இந்திய பெருங்கடலில் ஆழ்கடல் மீன்பிடிப்பு செய்வதற்கு ஏதுவாக, ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட மீன்பிடித் துறைமுகங்கள் 360 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த 216 கோடியே 73 இலட்சம் ரூபாய் செலவிடப்படும். மொத்தம் 576 கோடியே 73 இலட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும் இந்தத் திட்டங்களால் மன்னார் வளைகுடா பகுதியைச் சார்ந்த மாவட்டங்களின் மீனவர்கள் பெரிதும் பயனடைவார்கள்; (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களுடைய வாழ்வாதாரமும் மேம்படும்.

அதுமட்டுமல்ல; நமது மீனவ சகோதரர்களின் குடும்பத்தினர் கூடுதல் வாய்ப்புகள் பெற்று, அதிகமான பொருளீட்ட வழிவகை ஏற்படுத்தப்படும் என்பதை இந்தப் பேரவையில் தெரிவித்து அமைகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க,ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.